# தமிழ்நாட்டில் வாக்குத் திருட்டை ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம்!

**முதல்வர் உரை!... முதல் பக்கத் தொடர்ச்சி**

**இதையெல்லாம் எதற்காகச் சொல்கிறேன் என்றால், இன்றைக்கு யார் யாரோ கிளம்பி, இந்தக் கழகத்தை அழித்து விடலாம்; ஒழித்து விடலாம் என்று கனவு கண்டு கொண்டிருக்கிறார்களே, அவர்கள் கனவெல்லாம் நிச்சயம் பலிக்காது, எந்தக் கொம்பனாலும் இந்த இயக்கத்தைத் தொட்டுக் கூட பார்க்க முடியாது என்பதை மாத்திரம் இந்த நேரத்தில் நான் குறிப்பிட்டுக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.**

ஏழுமலை அவர்களுடைய அருமை மகன் நம்முடைய சகோதரர் பாபு அவர்கள் இங்கே நன்றி உரை ஆற்றுகிறபோது எடுத்துச் சொன்னார். “நாங்கள் பெருமைப் படுகிறோம்; மிகுந்த மகிழ்ச்சி அடைகிறோம்; இதை எங்கள் வாழ்நாளில் மறக்க மாட்டோம்” என்றெல்லாம் சொன்னார்கள். ஏழுமலை அவர்கள் இல்லத்தில் நடைபெறும் திருமணத்தில் நாங்கள் கலந்து கொள்வதில், உள்ளபடியே நாங்கள் பெருமைப்படுகிறோம்; மகிழ்ச்சி அடைகிறோம் என்றுதான் சொல்ல வேண்டும்.

**துணிவோடு களம் காணும் ஆற்றல்மிக்க செயல்வீரர் செங்குன்றம் பாபு!**

இன்றைக்கு பாபு அவர்கள், தந்தையின் வழியில் கொள்கைத் தடம் மாறாமல் இந்த இயக்கத்திற்குத் துணை நின்று தன்னுடைய கடமையை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார். மாணவப் பருவத்தில் இருந்தே கழகப் பணிகளுக்காகத் தன்னை ஒப்படைத்துக் கொண்டு முழுமையாக உழைத்துக் கொண்டு இருக்கிறார். போராட்டக் களம் என்றாலும், துணிவோடு களம் காணும் ஒரு ஆற்றல் மிக்க செயல்வீரராக நம்முடைய பாபு அவர்கள் விளங்கிக் கொண்டிருக்கிறார். அவர் மென் மேலும் வளர வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**SIRக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் வழக்கு - கழகம் சார்பில் போராட்டம்!**

இன்றைக்கு நாடு இருக்கும் சூழ்நிலை எல்லாம் உங்களுக்கு நன்றாகத் தெரியும். அதிலும் S.I.R. எனச் சொல்லப்படும், ஒரு சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகள் தமிழ்நாட்டில் தொடங்கியிருக்கிறது. இந்த மாதம் 4ஆம் தேதியிலிருந்து டிசம்பர் மாதம் 4ஆம் தேதி வரையில் அது நடைபெறுகிறது என்பதெல்லாம் உங்களுக்கு நன்றாகத் தெரியும்.

ஆனால் இதை எதிர்த்து தமிழ்நாட்டில் அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி நாம் தீர்மானம் போட்டு அந்த அடிப்படையில் உச்ச நீதிமன்றத்திற்கு நாம் சென்றிருக்கிறோம். வழக்குத் தொடுத்து, அந்த வழக்கு நடந்து கொண்டிருக்கிறது.

சட்டப் போராட்டம் ஒரு பக்கம் என்று சொன்னாலும், வாக்காளர் பட்டியல் திருத்தப்படும் பணிகள் ஒரு பக்கம் நடந்து கொண்டிருக்கிறது. அதைக் கண்காணிக்க வேண்டிய மிகப்பெரிய பொறுப்பு நமக்கு இருக்கிறது. அது, இன்றைய நிலையில் மிக மிக அவசியமான ஒன்று என்பதை நீங்கள் மறந்து விடக்கூடாது. அதற்காக வருகிற 11–ஆம் தேதி மாவட்டத் தலைநகரங்களில் நம்முடைய மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் ஆர்ப்பாட்டத்தை நாம் நடத்த இருக்கிறோம் என்ற செய்தியைக் கூட நேற்றைக்கு நீங்கள் பார்த்திருப்பீர்கள். எனவே அந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்று, நாம் நம்முடைய உணர்வை வெளிப்படுத்த இருக்கிறோம்.

ஏற்கெனவே வெளியிடப்பட்ட பட்டியல் அடிப்படையில், B.L.O.-க்கள்

## கழகத்தை எந்தக் கொம்பனாலும் தொட்டுக்கூட பார்க்க முடியாது!

ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று படிவங்களைத் தந்து கொண்டிருக்கிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். இரண்டு நாட்களாகத் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. டிசம்பர் மாதம் நான்காம் தேதிக்குள் இந்தப் படிவங்களை நிரப்பி அதைச் சமர்ப்பித்தாக வேண்டும். அவ்வாறு அளிக்கப்படும் பெயர்கள் மட்டும்தான் வாக்காளர் பட்டியலில் இடம்பெறும் என்ற ஒரு நெருக்கடி நிலை ஏற்பட்டிருக்கிறது.

தேர்தல் ஆணையத்தைப் பொறுத்தவரைக்கும், டிசம்பர் மாதம் 4ஆம் தேதி வரையில் மூன்று முறை அவர்கள் வர இருக்கிறார்கள். நாம் வேலைக்குச் சென்று விட்டால், ஏதாவது பணிகளுக்குச் சென்று விட்டால், வீட்டில் இல்லாமல் இருந்தால், நம்முடைய வாக்குரிமையை இழக்கும் சூழ்நிலை ஏற்பட்டுவிடும்.

**SIR குறித்து எந்த நேரத்திலும் கேட்டுத் தெளிவு பெற - அறிவாலயத்தில் உதவி மையம்!**

அதனால், இந்தப் பணி முடிந்த பிறகு ஆன்லைனில் நாம் தொடர்பு கொண்டு சேர்க்கின்ற முயற்சி இருக்கிறது. அது தேர்தல் நேரத்தில் எவ்வளவு பெரிய நெருக்கடி எல்லாம் ஏற்படும் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். எனவே, குறிப்பாக ஏழை எளியவர்கள், உழைப்பாளர்கள், கிராம மக்கள் இதனால் கடுமையாகப் பாதிக்கப்பட இருக்கிறார்கள். இது தொடர்பாக ஏதேனும் சந்தேகம் இருந்தால் அதற்கு ஒரு தொலைபேசி எண்ணை தேர்தல் ஆணையம் தந்திருக்கிறது. ஆனால் அதை மட்டுமே நம்பி நாம் ஏமாந்துவிடக் கூடாது. அதனால்தான் நம்முடைய கட்சியைப் பொறுத்த வரைக்கும், நம்முடைய சென்னை - அண்ணா அறிவாலயத்தில் கழகத்தின் சட்டத்துறைச் செயலாளர், நம்முடைய மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ அவர்கள் மேற்பார்வையில் உதவி மையம் அமைத்திருக்கிறோம். கழக நிர்வாகிகள் உதவிக்காக ஒரு தொலைபேசி எண்ணையும் அறிவித்திருக்கிறோம். கழக நிர்வாகிகள் அனைவரும் உங்களுக்கு ஏதேனும் உதவிகள் தேவைப்பட்டால், அந்தத் தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ள வேண்டும். S.I.R. தொடர்பாக எந்தக் குழப்பம் இருந்தாலும் இதில் நீங்கள் கேட்டுத் தெளிவு பெறலாம்.

**வாக்குத் திருட்டுக்கெதிராக ராகுல்காந்தி நடத்தும் மாபெரும் போராட்டம்!**

அதுமட்டுமல்ல, நம்முடைய காங்கிரஸ் பேரியக்கத்தின் இளந் தலைவராக விளங்கிக் கொண்டிருக்கும் ராகுல் காந்தி அவர்கள் இதற்காகப் பெரிய போராட்டத்தை - இயக்கத்தை நடத்திக் கொண்டிருக்கிறார். குறிப்பாக, கர்நாடகா, ஹரியானா பகுதிகளில் எந்த அளவிற்கு வாக்குத் திருட்டு நடந்திருக்கிறது என்றெல்லாம் ஆதாரப் பூர்வமாக எடுத்து வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்.

அப்படி ஒரு நிலை தமிழ்நாட்டில் நடக்க விடக்கூடாது. வருமுன் காப்பது நமது கடமையாக இருக்க வேண்டும். இந்தப் பெரும் பொறுப்பை கழகத்தின் BLA 2-க்கள் ஒவ்வொருவரும் செய்தாக வேண்டும். தமிழ்நாட்டின் ஜனநாயகத்தைக் காக்கும் காவலர்களாகக் கழகத்தின் பூத் ஏஜெண்டுகள் செயல்பட வேண்டும். அனைத்து வாக்குச்சாவடிகளிலும் வெற்றி பெறப் பணியாற்ற வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் உங்களை எல்லாம் கேட்டுக்கொண்டு,

**குழந்தைகளுக்கு அழகான தமிழ்ப் பெயர்களைச் சூட்டுங்கள்!**

இந்த மகிழ்ச்சியான நேரத்தில் மணக்கோலம் பூண்டிருக்கும் மணமக்களை நான் அன்போடு கேட்டுக் கொள்ள விரும்புவது, உங்களுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கு அழகான தமிழ்ப் பெயர்களைச் சூட்டுங்கள். தமிழ்நாட்டிற்குப் பெருமையைச் சேர்த்து, புகழ்மிக்க தமிழ்நாட்டை உருவாக்குங்கள் என்று நான் இந்த நேரத்தில் அன்போடு கேட்டுக் கொண்டு, வாழ்க்கையில் அனைத்து நன்மைகளையும் பெற்று, நீங்கள் சிறப்போடு வாழ வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் எடுத்துச் சொல்லியிருக்கும், “வீட்டிற்கு விளக்குகளாக, நாட்டிற்குத் தொண்டர்களாக” மணமக்கள் வாழ்க... வாழ்க... என்று வாழ்த்துகிறேன்.

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

**எஸ்.ஐ.ஆர்.க்கு எதிராக நவ.11–ல் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!**

# ஒருங்கிணைந்த திருவள்ளூர் மாவட்டக் கழகத்தினர் திரளாகப் பங்கேற்பீர்!

## மாவட்டச் செயலாளர்கள் – அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் – திருத்தணி எஸ்,சந்திரன் எம்,எல்,ஏ. – வல்லூர் கே.ரமேஷ்ராஜ் கூட்டறிக்கை!





*திருவள்ளூர், நவ. 8 -*

தமிழ்நாட்டில் சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு (S.I.R.) கொண்டு வந்துள்ள இந்தியத் தேர்தல் ஆணையத்தைக் கண்டித்து மதச் சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் வருகிற நவம்பர் 11 ஆம் தேதி அன்று அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் “மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்” நடைபெறும் என்று மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சித் தலைவர்கள் அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து திருவள்ளூர் ஒருங்கிணைந்த மாவட்ட திமுக சார்பில் மாவட்டச் செயலாளர்கள் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ, வல்லூர் எம்.எஸ்.கே. ரமேஷ் ராஜ் ஆகியோர் கூட்டறிக்கை வருமாறு: -

இந்தியத் தேர்தல் ஆணையம் சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு (S.I.R.) கொண்டு வந்துள்ளது.

சிறுபான்மையினர் வாக்குகள், பட்டியல் இன மக்களின் வாக்குகள் மற்றும் பா.ஜ.க.வின் எதிர்ப்பு வாக்குகள் ஆகியவற்றைக் குறிவைத்து நீக்கும் நோக்கோடு தகுதியுள்ள வாக்காளர்களை நீக்கி, தகுதியற்ற வாக்காளர்களைச் சேர்க்கும் சதித் திட்டத்தோடு ஒன்றிய பா.ஜ.க. அரசை தனக்குப் பாதுகாவலாக வைத்துக் கொண்டு தேர்தல் ஆணையம் இதனைச் செய்திட முயன்றிருப்பதோடு, பீகார் மாநிலத்தில் நடைபெற்ற குளறுபடிகள் எதையும் களையாமல் தமிழ்நாடு உள்ளிட்ட 12 மாநிலங்களில் S.I.R திட்டத்தைச் செயல்படுத்துவது மக்களின் வாக்குரிமையைப் பறிப்பதாகவும், ஜனநாயகத்தை அடியோடு குழி தோண்டி புதைப்பதாகவும் உள்ளது. அத்துடன் தேர்தல் ஆணையத்தின் அவசரமே அதிக சந்தேகத்தை எழுப்புகிறது.

சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு (S.I.R.)வின் மூலம் தமிழ்நாட்டில் உள்ள உண்மையான வாக்காளர்களின் பெயர்களைப் பட்டியலில் இருந்து நீக்க தேர்தல் ஆணையம் திட்டமிடுகிறது.

எனவே, இந்த S.I.R சீராய்வை தேர்தல் ஆணையம் உடனே கைவிடும்படி தேர்தல் ஆணையத்துக்கு வேண்டுகோள் விடுத்தும் அதனை செவிமடுக்காத ஒன்றிய பா.ஜ.க. அரசின் கைப்பாவையாக மாறி எதேச்சதிகாரப் போக்கில் இந்தியத் தேர்தல் ஆணையம்,

தமிழ்நாட்டில் சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு (S.I.R.) கொண்டு வந்துள்ளதை கண்டித்து ‘மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் சார்பில் வருகிற நவம்பர் 11 ஆம் தேதி செவ்வாய்க்கிழமை, அன்று காலை 10.00 மணியளவில், திருவள்ளூர் இரயில் நிலையம் அருகில் “மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்” நடைபெறுகிறது. இந்த கண்டன ஆர்பாட்டத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள் கண்டன உரை ஆற்றுகிறார். எனவே ஒருங்கிணைந்த திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் தலைவர்கள், செயலாளர்கள், நிர்வாகிகள், நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், தொண்டர்கள், திராவிட முன்னேற்ற கழகதின் மாநில மாவட்ட நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழகச் செயலாளர்கள் அணிகளின் அமைப்பாளர்கள் தலைவர்கள் துணைத் தலைவர்கள் துணை அமைப்பாளர்கள் உள்ளாட்சி இந்நாள் முன்னாள் பிரதிநிதிகள் கழக நிர்வாகிகள் நிர்வாக பொதுமக்கள் அனைவரும் பெருந்திரளாக கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு வெற்றி பெற செய்திடுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.



தி.மு.க மாணவர் அணி சார்பில் நவம்பர் 7ஆம் தேதி சேலம், கரும்பாலையில் உள்ள தீர்த்தமலைத் திருமண மாளிகையில் மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், புதுச்சேரி மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இந்த ஆலோசனைக் கூட்டத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர், சேலம் மத்திய மாவட்டச் செயலாளர் இரா.இராஜேந்திரன் தலைமை வகித்தார். சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி., சேலம் மேற்கு மாவட்டச் செயலாளர் டி.எம். செல்வகணபதி எம்.பி. ஆகியோர் முன்னிலை வகித்தனர். தி.மு.க மாணவர் அணி மாநிலச் செயலாளர் இரா.ராஜீவ்காந்தி மற்றும் மாநிலத் துணைச் செயலாளர்கள் மன்னை த.சோழராஜன், அதலை பி.செந்தில்குமார், தமிழ் கா.அமுதரசன், பி.எம்.ஆனந்த், வி.ஜி.கோகுல், திருமதி பூர்ணசங்கீதா சின்னமுத்து, திருமதி ஜெ.வீரமணி, ஜெ.இராமகிருஷ்ணன் ஆகியோர் நோக்கவுரை ஆற்றினர். இக்கூட்டத்தில் மாநில துணைச் செயலாளர் சேலம் ரா.தமிழரசன், முனைவர் சீனிவாசன் அப்பாதுரை, கோகுல் காளிதாஸ், அ.கண்ணன், எம்.மணிகண்டன் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.



திருப்பத்தூர் மாவட்டம், கந்திலி ஒன்றியம், கொரட்டி அரசு மேல்நிலைப்பள்ளியில் பயிலும் +2 மாணவ, மாணவிகளுக்கு 5 ஆண்டு வினா – வங்கி புத்தகங்களை அ.நல்லதம்பி எம்.எல்.ஏ. வழங்கினார். இந்நிகழ்வில் திருமதி திருமுருகன், கே.ஏ.குணசேகரன், கே.முருகேசன், கே.எஸ்.ஏ.மோகன்ராஜ், சண்முகம், லட்சுமி கார்த்திகேயன், தாமோதிரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**வே. ரூசோ**

**நவம்பர் 8 (1998)**



**தனது பள்ளிப் பருவம் முதல் கழகப் பணிகளில் ஈடுபட்டு வந்தவர்.**

**சிவகங்கை மாவட்டக் கழக இளைஞர் அணி அமைப்பாளராகவும் – மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி துணை தலைவராகவும் பணியாற்றியவர்.**

**இளைஞர்களின் அன்பையும் – மக்களின் நம்பிக்கையையும் பெற்று கழகத் தலைமையின் கனிவான ஆதரவைப் பெற்று, மாவட்டத்து முன்னணியினரின் பாசத்திற்குரிய பண்பாளராக வளர்ந்தவர்.**

**“கண்ணிலேயே நிற்கும் கண்மணி” என தலைவர் கலைஞரால் புகழப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**